# மலாயா இந்தியர்களிடையே பிளவு!


REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

The "Nam Nadu": A Tamil Daily. ☆ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்
சென்னை: ஆனி மீ 19உ சனி (3—7—54) | வெளியூர்: ஆனி மீ 20உ ஞாயிறு (4—7—54)
மலர்: 2 | இதழ்: 17


## பூதான இயக்கம் தோற்றால் அறப்போர் தொடுப்பேன்!

### நாடு தொழில் மயமாவது அவசியமல்ல

**ஆச்சார்ய வினோபா பாவே விளக்கம்!**

"வெள்ளையர்களின் அறிவுத் திறனுக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்; அவர்களுக்கு, உலகத்தில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துகொண்டு, கால நிலைக்குத் தக்கவாறு தங்களை மாற்றிக்கொள்ளும் பண்பிருந்தது; இந்தியாவை விட்டு வெளியேறுவதென ஒரு நாள் குறிப்பிட்டு அதன் படியே அவர்களும் வெளியேறினர்."

"அந்த நல்ல உதாரணத்தைப் பின்பற்றியாவது, இந்தியாவின் இன்றையத் தலைவர்கள், ஏழை — பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வையும், ஏழ்மையையும் ஒழித்துக் கட்டுவது என்ற தங்களின் உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும். இந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாவிடில், 'சுதந்திரம்' அர்த்தமற்ற ஒன்றாகி விடுவதுடன், நீண்ட நாட்களுக்கு நிலைக்கவும் செய்யாது."

"இன்றைய உலகில் ஏழ்மையை ஒழிக்காமல் வாழ்வது சாத்தியமில்லை. பூதான இயக்கம் இந்த உறுதி மொழியைக் காக்க உதவும் என நம்புகிறேன்."

"நிலமில்லாதாருக்கு விநியோகம் செய்வதற்காக நிலம் சேகரிக்கிற இந்த எனது பூமி தான இயக்கம் தோற்றுப் போகுமானால் நான் அறப்போரில் ஈடுபடுவேன்."

—என்று ஆச்சாரிய வினோபாபாவே பூமி தான இயக்க ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிலர் சொல்கிறார்கள்—'நாடு முழுவதும் தொழில் மயமாக்கப்பட்டால் தான் பாகிஸ்தான் படையெடுத்தால் இந்தியாவைக் காக்க முடியும்'—என்று! அது தவறு; தேவையுமில்லை! பாகிஸ்தானுடன் உள்ள தகராறுகளை, சோதர வாஞ்சையுடன் அணுகி, ஆயுதங்களைத் துணைக்கழைக்காமல் தீர்த்துக் கொள்ள முடியும்—தீர்த்துக் கொள்ள வேண்டும்: அப்படிச் செய்யாவிடின், இரு நாடுகளிலும் துயரங்கள் பலப்பட்டு, இப்போது துய்க்கிற சுதந்திரத்தை அவைகள் இழக்க நேரிடுவதுடன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பீரங்கிகளுக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் இரையாக வேண்டியுமிருக்கும்" என்றார்.

### விமான விபத்து

ஜெட் விமானமொன்று விபத்துக்குள்ளாகியது. இதன் காரணமாய் ஒரு கார், இரண்டு வீடுகள் நாசமானதுடன் 6 பேர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிகிறது.

## மாட்டிற்குப் பதில் மனைவி!

**ஏரில் கட்டி உழுத காட்சி!**

தோஹித், ஜூலை 2— நெல்லர் கிராமத்தைச் சேர்ந்த 'பில்' என்ற ஆதிவாசி வகுப்பைச் சேர்ந்த ஒரு விவசாயி தனது மனைவியை ஒரு மாட்டுடன் ஏரில் கட்டி, நான்கு மணி நேரம் தனது வயலை உழுதான் என்று தெரிகிறது.

கணவன், மாடுகளைக் கொடுமைப்படுத்துவதைக் கண்ட மனைவி, அவனுடன் சண்டையிட்டாளாம்; ஆத்திரம் கொண்ட கணவன், 'மாட்டுக்குப் பரிந்து பேசுகிறாயா!' என்று மனைவியையே ஏரில் கட்டி உழுதான் என்று தெரிகிறது.

## பிரமாணம் எடுத்துக் கொள்ளாத ஊமைக்கு பிரஜா உரிமை மறுப்பு!

**இலங்கை சர்க்கார் போக்கு!**

கொழும்பு, ஜூலை 3— இயற்கையின் மீது கூட இலங்கை அரசு கொடுமையாக தனது பிடிவாதத்தைக் காட்டுகிறது.

துரைசாமி என்பவர் பிறவியில் ஊமை. அவர் இலங்கைப் பிரஜையாக மனுப் போட்டிருந்தார் என்று தெரிகிறது; அவரது மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதாம்.

பிரஜா உரிமை பெறுவோர் கமிஷனர் முன்பு விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டுமாம்.

துரைசாமி, பிரமாணம் எடுத்துக்கொண்டு பிரஜா உரிமை சர்டிபிகேட்டைப் பெற்றுப்போகுமாறு அழைக்கப்பட்டிருந்தார்.

ஊமையான அவர் எவ்வாறு பிரமாணம் எடுத்துக்கொள்ள முடியும்?

சட்டப்படி பிரமாணம் எடுத்துக் கொள்ளாததால் துரைசாமிக்கு சர்டிபிகேட் தர கமிஷனர் மறுத்துவிட்டார்.

"நான் என்ன செய்வது? உன்னை யார் ஊமையாகப் பிறக்கச்சொன்னது?" என்று கமிஷனர் சட்டம் பேசினாராம்.

கல்லெண்ணத்துடன் பிரஜா உரிமை மனுக்கள் அனுமதிக்கப்படுகின்றன என்று இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர்.

## 'இந்து' இதழ் மன்னிப்பு கோருகிறது

**நிபந்தனையை மீறி பரீட்சை முடிவை வெளியிட்டதாம்!—சென்னை சர்க்கார் அறிக்கை**

சென்னை, ஜூலை 2— சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

"உரிய காலத்தில் பிரசுரிப்பதற்குச் சௌகரியமாக இருக்கவேண்டுமென்பதற்காக 1954-ம் ஆண்டு எஸ். எஸ். எல். ஸி. தேர்வு முடிவுகள் வழக்கம்போல் எல்லாப் பத்திரிகைகளுக்கும் முன்னதாக அனுப்பிவைக்கப்பட்டன. இந்த முடிவுகள் ஜூன் 3-ம் தேதி மாலை 4 மணிக்கு முன்னர் எந்த இடத்திலும் பிரசுரிக்கப்படக் கூடாதென்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த முடிவுகள் ஜூன் 2-ந் தேதிய 'இந்து' வெளியூர் பதிப்பில் அச்சிடப்பட்டு வெளியூர்களில் 3-ந் தேதி பிரசுரிக்கப்பட்டதாக சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இது நிபந்தனையை மீறிய செயலாகும்; பரீட்சை போர்டு கமிஷனரின் கடிதத்தின்படி நடக்க வேண்டியது தமது கடமையெனக் கருதிய இதர பத்திரிகைகளை இது பாதிப்பதாகும்; ஆகவே, இதுபற்றி, முதலில் கமிஷனரும், பிறகு சர்க்காரும் 'இந்து' பத்திரிகையைக் கேட்டார்கள்.

கமிஷனரின் நிபந்தனையை மீறி நடந்த குற்றத்திற்காக 'இந்து' ஆசிரியர் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

## ஆதிக்க வெறியும், பதவிப் பித்தும் தலைவிரித்தாடுகிறது!

**கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகுவோர் காணும் குறை!**

காரைக்குடியில் 12 ஆண்டுகளாக கம்யூனிஸ்டு கட்சியில் தொண்டாற்றி வந்த தோழர் கே. கல்லைப்பா என்பவர் கம்யூனிஸ்டு கட்சியில் தமக்குள்ள நீண்ட அனுபவத்தின் வாயிலாக கட்சியில் ஆதிக்க வெறியும், பதவிப் பித்தும் தாண்டவமாடுகிறதென்றும், அங்கு நீதி தலைசாய்ந்து விட்டதாகவும், விவசாயிகள் தொழிலாளிகளுக்காகப் பாடுபடுவதாகக் கூறும் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகள் நேர்மாறாக இருப்பதால் தாம் கட்சியிலிருந்து ராஜிநாமா செய்து தமக்கும் கட்சிக்கும் உள்ள தொடர்பை அறுத்துக் கொண்டு விட்டதாகவும், 2-7-54 'தினமணி' இதழில் தெரிவித்திருக்கிறார்.

## விஜயலட்சுமி விஜயம் செய்வதின் விளைவு!

### எல்லா சமூகத்தையும் சேர்ந்த வரவேற்புக் குழு அமைப்பில் கருத்து வேற்றுமை!

**இரண்டு தனித் தனி வரவேற்புக்கு ஏற்பாடு!**

ஐ. நா. சபையின் தலைவராக இருக்கிற திருமதி விஜயலட்சுமி பண்டிட் வருகிற ஆகஸ்டு மாதத்து வக்கத்தில் மலாயா செல்ல இருக்கிறார். மலாயா கூட்டாட்சியின் விருந்தினராக விஜயலட்சுமி அங்கு செல்லுகிறார்.

அம்மையாரை வரவேற்க, எல்லா சமூகத்தவரையும் சேர்ந்த முக்கியஸ்தர்களைக் கொண்டு ஒரு வரவேற்புக் குழு அமைத்து, அதற்குத் தலைவராக இந்தியரல்லாத ஒருவரை நியமிப்பது என மலாயா இந்திய காங்கிரஸ் விரும்பியது.

அந்த விருப்பம், இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக மலாயாவில் இருக்கிற அதிகாரியான பி. எம். நாயருக்குப் பிடிக்கவில்லை.

இதுபற்றி ஒரு முடிவிற்கு வர, மூன்று கூட்டங்கள், அதிகாரியின் அலுவலகத்தில் நடைபெற்றன. இரு சாராரும் ஒருமனப்பட்ட முடிவிற்கு வரமுடியவில்லை.

தனித்தனியாக அம்மையாரை வரவேற்பது என, இரு பிரிவினரும் முடிவிற்கு வந்துள்ளனர்.

ஐ. நா. சபை இருப்பதோ, உலகில் சமாதானத்தை உண்டாக்கிப் பாதுகாப்பதற்கு. ஆனால் அதன் தலைவர் விஜயமோ, மலாயா இந்தியர்களிடை ஏற்கனவே இருந்துவந்த ஒற்றுமையையும் சீர்குலைப்பதாக இருக்கிறது!

### சர்க்கரை

சென்னைத் துறைமுகத்தில் 3,000 டன் ஜப்பானிய சர்க்கரை வந்திறங்கியது. இது தென் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கொழும்புவில் அடிதடி

மசூதி ஒன்றின் எதிரே புத்தர்கள் ஊர்வலம் ஒன்று மேளதாளத்துடன் சென்றபோது, பாட்டனபிட்டியாவில், முஸ்லிம்களுக்கும்—பௌத்தர்களுக்கும் அடிதடி ஏற்பட்டு ஒருவர் மரணமடைந்தார் என்றும், பலருக்குக் காயம் ஏற்பட்டதென்றும் தெரிகிறது.

## பஞ்சாயத்து தேர்தலில் தி. மு. கழகம் வெற்றி

**கம்யூனிஸ்டு, காங்கிரஸ் தோற்றது!**

சேலம் ஆனைபாம்பட்டி பஞ்சாயத்து இடைக்காலத் தேர்தல் 29—6—54ல் நடைபெற்றது.

காங்கிரஸ், கம்யூனிஸ்டு, தி. மு. கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிட்டனர்.

தி மு கழகத்தைச் சேர்ந்த தோழர் ஆர். மாரிமுத்து என்பவர் ஏராளமான ஓட்டுகள் அதிகம் பெற்று அமோக வெற்றி பெற்றார்.

ஓட்டு விவரம்:—

| | |
|---|---|
| ஆர். மாரிமுத்து (தி. மு. க) | 1,061 |
| ஆர். சீனிவாசன் (கம்யூனிஸ்டு) | 526 |
| ஆர் சுப்புராமன் (காங்கிரஸ்) | 335 |

இந்த இடைக்கால பஞ்சாயத்துத் தேர்தலில் பலத்த போட்டி இருந்தது.

கம்யூனிஸ்டு தோழரை ஆதரித்து, மெத்தநாயக்கன்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர் டி. ராமச்சந்திரன், ஆத்தூர் பாஞ்சாலன், ஆனைபம்பட்டி கூட்டுறவு சொசைட்டித் தலைவர் மறைனிமுத்து முதலியோர் தீவிரமாக வேலை செய்தனர்.

ஆத்தூர் தொகுதி எம்.எல் ஏ. தோழர் எம். பி. சுப்ரமணியம், ஆரியபாளையம் ஆனைமுத்து, நரசிங்கபுரம் ராஜூ முதலிய தோழர்கள் தி. மு. க. தோழர் ஆர். மாரிமுத்துவை ஆதரித்து வேலை செய்தனர். (க. கி.)

நம் நாடு

சென்னை 3-7—54 சனி

# சிற்றூர் ஆட்சி!

சிற்றூர் ஆட்சி மன்றங்களின் எதிர்காலம் பற்றி ஆராய்ந்து முடிவுகட்டுவதற்கு சிம்லா நகரில் நடைபெற்ற, மாநில ஸ்தல ஸ்தாபன அமைச்சர்களின் மாநாடு முடிந்துவிட்டது. அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் இன்னமும் வெளியாகவில்லை.

அம்மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் சபை தலைவர் மாவலங்கர், 'சுயாட்சியின் அடிப்படை அமைப்பு'களாக சிற்றூர் ஆட்சி மன்றங்கள் இருக்க வேண்டும் என, மிக்க ஆர்வத்தோடு வாதிட்டுள்ளார். அவர் கருத்தை, அப்படியே சிம்லா மாநாடு ஒப்புக்கொண்டு, இப்பொழுது உள்ளதைவிட, கூடுதலான அதிகாரத்தை, சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென தீர்மானித்திருக்கிறது.

மக்கள் சபை தலைவர் கூறுவது போல, 'சுயாட்சியின் அடிப்படை அமைப்பு'களாக சிற்றூர் ஆட்சி மன்றங்கள் ஆக்கப்பட வேண்டுமானால், இப்பொழுது உள்ளது போல அதிகாரம் சிற்சில இடங்களில் குவியலாகக் குவிந்து வைத்திருப்பதுபோல் அல்லாமல், சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கும் அதிகாரத்தை சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடு உருவாக வேண்டும். அவ்வாறு அதிகாரத்தை சரிசமமாகப் பகிர்ந்து கொள்வதோடு, அதிகப்படியான அதிகாரத்தை தம்வசத்தில் வைத்துக் கொண்டுள்ள மாநில மத்திய ஆட்சி, எடுத்ததற்கெல்லாம் சிற்றூர் ஆட்சியின் நடைமுறையில் குறுக்கிடுவது என்பதும் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான், துளியும் அச்சமின்றி சிற்றூர் ஆட்சி மன்றங்கள், தாம் விரும்பும் வகையில், தங்கள் தங்கள் ஆட்சி மண்டலங்களுக்குட்பட்ட மக்களுக்கு, தேவையான வசதியினை, கடமையான வகையில், குந்தகமில்லாமல் செய்வது என்பது சாத்தியமாகக் கூடும்.

சிற்றூர் ஆட்சி மன்றங்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் ஒன்றுக்குப் பலவாக சட்டம்போட்டு பெருக்கிவிட்டு, அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான பெருவருவாயிக்கு வசதி செய்யாது விட்டு விட்டால், தாம் பெற்றுள்ள கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாமல் திண்டாடும் கேவல நிலைக்கு, சிற்றூர் ஆட்சி மன்றங்கள் தாமாகவே வந்துவிடும். அந்த சூழ்நிலையில், மக்கள் மதிப்பை, சிற்றூர் ஆட்சி மன்றங்கள் பெறத் தவறிவிடுவதோடு, மக்களின் கேலியையும் நிந்தனையையும் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலை, அவைகளுக்கு ஏற்பட்டுவிடும்.

தனது அதிகார எல்லைக்குள் வரி விதித்துக்கொள்ளும் உரிமையை சிற்றூர் ஆட்சி மன்றத்திடம் ஒப்படைத்துவிடும் ஒன்றினால் மட்டுமே, சிற்றூர் ஆட்சி மன்றங்கள், தங்களுடைய செலவை சரிகட்டிக்கொள்ள தக்கான வருவாய்க்கு வரிகள் விதித்து, நிர்வாகத்தைத் திறம்பட நடத்திக்கொள்ளும் என எதிர்பார்ப்பதும் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதாகாது. மேலும் மேலும் அதிகமான வரிகள் விதிப்பதை, நமது சிற்றூர் மக்கள் தாங்கிக் கொள்ளும் நிலைமை இல்லை. வரி கொடுக்க ஆற்றல் படைத்தவர்களுக்குங்கூட, மேலும் மேலும் வரி கொடுப்பது என்பது, எரிச்சலையும் எதிர்ப்பையும் உண்டாக்கக்கூடிய ஒரு மனோபிரச்னையாகும். வசதி படைத்தவர்களே, இம்மனோவியாதியால் தாக்குறுகின்றவர் என்றால், வரி கொடுக்கும் சக்தி துளியும் இல்லாதவர்கள், அவ்வியாதிக்கு அடிமையாகி, சிற்றூர் ஆட்சி மன்றங்கள் வேண்டவே வேண்டாம் என்று எதிர்ப்பு செய்யத்தானே செய்வர்?

சிற்றூர் ஆட்சி மன்றங்கள் போடும் வரிகளைக் கட்ட முடியாத நிலையில், அந்த ஆட்சித் தரையே தங்களுக்கு அறவே வேண்டாம் என்று சொல்லுகின்ற நிலை, நாட்டில் ஏற்பட்டு விட்டால், 'சுயாட்சியின் அடிப்படை அமைப்பு'களாக சிற்றூர் ஆட்சி மன்றங்கள் உருவாக வேண்டும் என்ற உயர்ந்த கோட்பாடு தகர்க்கப்பட்டு தரைமட்டமாகிவிடும். மீண்டும், சிற்றூர் ஆட்சி மன்றங்கள் என்ற பெயரைக் கேட்டாலே, மக்களுக்கு ஏற்படுகின்ற அச்சத்தைப் போக்கி, சுயாட்சி பயிற்சி அளிப்பது என்பது, என்றென்றைக்கும் எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

எனவே, சிற்றூர் ஆட்சி மன்றங்களுடைய அதிகார வரம்பை விரிவாக்குவதோடு, போதுமான செல்வ வளர்ச்சிக்கும் ஏற்பாடு செய்யவும் வேண்டும். அப்பொழுதுதான், 'சுயாட்சியின் அடிப்படை அமைப்பு'களாக சிற்றூர் ஆட்சி மன்றங்கள் உருவாகி, சிற்றூர் மக்களுக்கு நல்ல பணியில் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் மூட்ட உதவி செய்யும். இந்த,

சிற்றூர் ஆட்சி மன்றத் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிடக் கூடாது எனவும் சிம்லா மாநாடு ஆலோசனை கூறி இருக்கிறது. இம்முடிவை, காங்கிரஸ் கட்சி நீங்கலாக மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் உற்சாகத்தோடு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

மற்ற அரசியல் கட்சிகளுக்கெல்லாம், வழிகாட்டியாக இருக்க வேண்டிய காங்கிரஸ் கட்சி, வேறு பல துறைகளில் வேண்டுமென்றே தவறு செய்து வருவதுபோலவே, ஸ்தல ஸ்தாபன தேர்தல் துறையிலும், அவசியமற்ற அரசியல் பிரச்னையைப் புகுத்தி அரசியல் மூலாம் பூசி வருகிறது. அதைப் பின்பற்றி இரண்டொரு அரசியல் கட்சிகளும், அரசியல் பிரச்னைகளை ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் புகுத்தக் கிளம்பி இருக்கின்றன.

சிற்றூர் ஆட்சி மன்றத் தேர்தல்களில் அரசியலைப் புகுத்தக்கூடாது என முடிவு கண்ட சிம்லா மாநாடு, அதற்குப் பரிகாரமாக, பயங்கரமான விளைவுகளைக் கொண்ட ஒரு ஏற்பாட்டை சுட்டிக் காட்டி இருக்கிறது. அதாவது, தேர்தலில் தனி நபர்கள் போட்டியிடாமல், குறிப்பிட்ட சிலரை தேர்தலில் மக்கள் ஒப்புவது என்ற ஏற்பாட்டை, மாற்றமாகக் குறிப்பிட்டிருக்கிறது சிம்லா மாநாடு.

இவ்வாறு தேர்தலில் மக்கள் ஆமோதிக்க வேண்டிய சிலரை பொறுக்கி எடுத்து நியமிப்பது எவர் என்பதை சிம்லா விளக்கிக் கூறவில்லை. இந்த முறை, சுயாட்சி உணர்ச்சிக்கு உலை வைத்துவிடக் கூடியது என்பது மட்டுமல்லாமல், மக்களாட்சி முறைக்கே மாறுபட்டதுமாகும் என்பது வெளிப்படை.

இம்முறையினால், தேர்தலில் ஒழுக்கம் வளருவதற்கு பதில், இப்பொழுது உள்ளதைக் காட்டிலும் ஒழுக்கக் கேடு கூடுதலாகும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சியின் சூத்திரதாரிகளின் அன்புக்குப் பாத்திரமானவர்கள்தான், சிற்றூர் ஆட்சி மன்றங்களில் இடம் பெற முடியும் என்ற இழிநிலையும், இதனால் ஏற்பட இடமுண்டு. இந்தத் தேர்தல் ஏற்பாட்டில், சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரமும், அதிகமான பண வரவுக்கு வழியும் செய்யப்பட்டுவிட்டால், சிற்றூர் ஆட்சி மன்றங்கள் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியின் சர்வாதிகார அடிப்படை அமைப்புகளாக மாறவும், மக்களை அச்சுறுத்தி கொள்ளையடிக்கும் கொலைக்கூடமாக இயங்கவுமான அவலநிலை ஏற்பட்டுவிடுவது மூக்காலும் உறுதியாகும்.

சிம்லா மாநாடு இந்தத் தேர்தல் யோசனையை வெளியிட்டது வேதனை தரும் விசித்திரமாகும். ஆனால், காங்கிரஸ் அமைச்சர்களே கூடிய மாநாடு, சர்வாதிகார ஏற்பாட்டிற்கான யோசனையைக் கூறியதில் நாம் ஆச்சரியப்படவில்லை; அதிர்ச்சியடையவுமில்லை.

## விலை குறைகிறது!

விமானப் பெட்ரோல், மோட்டார் பெட்ரோல் தவிர வேறு சில பெட்ரோலிய பொருள்களின் விலைகளைக் குறைத்திருப்பதாக மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

8 காலன்கள் கொண்ட ஒரு டின் மண்ணெண்ணெயின் விலையில் ஒரு அணா முதல் இரண்டு அணா வரையில் குறைவு.

கனம் குறைவான டீசல் ஆயிலை ஒரு டன்னின் ரூ 3½ முதல் ரூ 5—3—0 வரை, எரி எண்ணெ ரூ 3—8—0 முதல் ரூ 4—13—0 வரை, அசுத்தப்பட்ட டீசல் எண்ணெய் ஒரு காலனுக்கு 3 முதல் 9 பைசா வரை, ஆவியாகும் எண்ணெய் ஒரு காலனுக்கு முக்காலணா முதல் ஒரு அணா வரை, இவ்வாறாக விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

# பம்பாய் தொழிற் கல்லூரியில் இடம் ஒதுக்கல்

## தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படும் அநீதி!

### 'ஏக இந்தியா'க்காரர்களுக்கு காணிக்கை!

அகில இந்திய தொழிற் கல்விக் கவுன்சில், பம்பாயில் உள்ள வி. ஜே. தொழிற்கூடத்தில் 1954—55-ம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கென 30 இடங்களை ஒதுக்கியுள்ளது.

மெக்கானிக்கல் இஞ்சினியரிங் பிரிவில், மத்திய பாரத மாநிலம் ஆறு இடங்களையும், 'சி', 'டி' பிரிவு மாநிலங்கள், டில்லியைத் தவிர, இரண்டு இடங்களையும் பெறும்; ஒரு ஒதுக்கப்படாத இடமும் உண்டு.

மின்சார இஞ்சினியரிங் பிரிவில் மத்தியபாரத் மாநிலத்திற்கு ஆறு இடங்களும், டில்லி தவிர்த்த, 'சி', 'டி' மாநிலங்களுக்கு மூன்று இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிவில் இஞ்சினியரிங் பிரிவில் அஸ்ஸாம் 2, ஒரிசா 4, ஜம்மு, காஷ்மீர் 2, பெப்சு 1, மத்திய பாரத் 2, 'சி' 'டி' மாநிலங்கள் 2 ஆக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; இரண்டு ஒதுக்கப்படாத இடங்களும் உண்டு.

டெக்ஸ்டைல் இஞ்சினியரிங் பிரிவில் ராஜஸ்தான், உத்தர பிரதேசம் ஜம்மு, காஷ்மீர் ஆகியவற்றிற்கு இரண்டு இடங்களும், மத்திய பாரத், மத்திய பிரதேசம், சௌராஷ்ட்ரா ஆகியவற்றிற்கு ஒவ்வொரு இடங்களும் 'சி', 'டி' மாநிலங்களுக்கு ஒரு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது; ஒரு இடம் ஒதுக்கப்படாது இருக்கும்.

## உலக பாங்கியின் யோசனைகளை பாகிஸ்தான் நிராகரிக்கவில்லை!

### சிந்து நதி பள்ளத்தாக்கு அபிவிருத்தி பற்றி பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகிறது

சிந்துநதி வடிகால் பள்ளத்தாக்கு அபிவிருத்திக்கான உலக பாங்கியின் யோசனைகளை பாகிஸ்தான் நிராகரிக்கவில்லை எனத் தெரிகிறது.

பாகிஸ்தானுக்கு இந்த யோசனைகள் நிச்சயமற்றவையாகத் தெரிவதால் அவைகளை ஏற்பதா, [illegible] நிராகரிப்பதா என்ற முடிவுக்கு வர, நிர ஆலோசிக்க வேண்டியிருக்கிறதென்றே பாகிஸ்தான் உலக பாங்கிற்கு அறிவித்துள்ளதாகத் தெரிகின்றது.

இந்தியா — பாகிஸ்தான் — உலக பாங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இன்னமும் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இந்தியா அந்தப் பேச்சு வார்த்தைகளினின்றும் விலகிக் கொள்ளவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

'சட்லெஜ் நதித் தண்ணீரை ஜூலை 8-ல் பக்ரா கால்வாய்க்கு திருப்புவோம்' என்ற இந்திய அரசாங்கத்தின் அறிவிப்பு, 1952 மார்ச்சில் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்று சொல்லப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், 'உலக பாங்கியுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது, தண்ணீர் குறைப்பதை எந்த நாடும் செய்யக் கூடாதென்று' சொல்லப்பட்டுள்ளது.

சட்லெஜ் நதியின் தண்ணீரை திருப்புவது என்ற இந்தியாவின் முடிவு பாகிஸ்தானுக்கும் பயங்கரமான விளைவுகளைத் தருமென அஞ்சப்படுகிறது. மேற்கு பஞ்சாபின் பொருளாதார நிலை முழுதும் சிறந்து வாட்ட நதிகளிலிருந்து கிடைக்கும் தண்ணீர் குறைந்தால் சீர்கெட்டுவிடும் எனச் சொல்லப்படுகிறது. இந்த நதிகள் 65 லட்சம் ஏகர் நிலத்திற்கு நீர் பாய்ச்சுகின்றனவாம்.

[குறிப்பு—இதுபற்றி ஏற்கனவே இந்தியா—பாகிஸ்தான் உலக பாங்கி ஆகியவை நடத்திய பேச்சுக்கள் முடிந்து விட்டன என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.]

## நில வருமானம்: பஞ்சாயத்துகளுக்கு பங்கு கொடுக்கவும்

### அ. இ. காங்கிரஸ் பஞ்சாயத்து குழுவின் கருத்து

கிராம பஞ்சாயத்துகள் திறம்பட வேலை செய்ய, நிலவரி வருமானத்தில் அவைகளுக்கு ஒரு பங்கு தரலாம் என, அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுவின் பஞ்சாயத்து உபகுழு அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

பஞ்சாயத்துகளைக் கவனிப்பதற்குப் போகச் செய்கிற புதிய வரிகளை விதிப்பதற்கு மாறாக, குறிப்பிட்ட வட்டாரத்தில் அரசாங்கத் திட்டங்களை நிறைவேற்ற உழைப்பு, ரொக்க நன்கொடை போன்ற ரூபத்தில் கிராம மக்களிடமிருந்து பணம் திரட்டுவது வலியுறுத்தப்பட வேண்டுமெனவும், அந்த உபகுழு கருதுவதாகத் தெரிகிறது.

"மாநில அரசாங்கத்திற்கும், கிராமப் பஞ்சாயத்திற்கும் மிடையில் ஒரு தாலூகாவாரியான இடைப் பஞ்சாயத்து இருக்க வேண்டும்; கிராமப் பஞ்சாயத்துகளின் நடவடிக்கைகளை ஒருங்கு அளவாக நிர்வகிக்கவும், மேற்பார்க்கவும், தாலூகா பஞ்சாயத்துகள் உதவி செய்ய வேண்டும்; கிராமப் பகுதிகளின் நலஅபிவிருத்தி வேலைகளுக்கு உதவ திறமையான அதிகாரிகள் தாலூகா பஞ்சாயத்துகளில் நியமிக்கப்பட வேண்டும்," எனவும் அக்குழு கருதுகிறது.

கிராமப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், பஞ்சாயத்துகளினின்றும் விலகி தனியாக இயங்குவனவாக இருக்க வேண்டும். அவைகளுக்கு, பஞ்சாயத்துகள் உதவலாம்.

## மைசூர் அரசினர் முடிவு

பெங்களூர், ஜூலை 1—

உபரி இருப்பிலுள்ள 50,000 டன் அரிசி கெடாமல் இருப்பதற்கு முன் விற்பனை செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், மைசூர் சர்க்கார் ரேஷன் டிப்போக்களில் ரூபாய்க்கு ஒன்றே முக்கால் சேராக இருந்தஉயர்ந்த ரக அரிசியை 2 சேராகவும், ஒரு சேர் ஏழரை அணாவுக்கு விற்ற சிப்பிய அரிசியை 2 சேர் வீதமும், சேர் எட்டரை அணாவுக்கு விற்ற இந்த அரிசியை ரூபாய்க்கு 2 சேராகவும் விற்க ஏற்பாடு செய்துள்ளனர்.

# கழகச் செய்திகள்

## சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

20—6—54 காலை 10 மணியளவில் எம். கே. அம்மன் கோவில் தெரு, ரெட்டியார் தோட்டத்தில் சென்னை மயிலை தி. மு. கழகத்தின் பழைய செயற் குழுவைக் கலைத்துவிட்டு, சென்னை மாவட்டச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், புதிய நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: பி. எம். மதியழகன்; துணைச் செயலாளர்: எம். இராசு; பொருளாளர். என் கபாலி; மாவட்டப் பிரதிநிதிகள்: பி. எம் மதியழகன் கே. கந்தசாமி; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## கடையநல்லூர் நகர தி. மு. கழகம்

29—6—54 இரவு 8 மணியளவில் செயலாளர் ஐ. கந்தசாமி தலைமையில் தி. மு. கழக செயற்குழு அவசரக் கூட்டம் நடைபெற்றபோது, நகராட்சி மன்ற புதிய வரி உயர்வால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால், இம்முறையைக் கண்டித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## விழுப்புரம் தி. மு. கழகம்

26—6—54 மாலை 7 மணிக்கு விழுப்புரம் தி. மு கழக அவசர செயற்குழு கூட்டம் தோழர் க. மு உசேன் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மந்திரி ராமசாமி படையாச்சியார், தி. மு கழக ஆதரவு பெற்றும், திராவிடநாடு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டும் சென்ற தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக நின்று வெற்றிபெற்று அண்மையில் காங்கிரஸ் அரசாங்கத்தில் மந்திரியான துமல்லாமல், பொறுப்பற்ற தன்மையில், தன்னை எதிர்ப்பவர்களையெல்லாம் தென்னாற்காடு ஜில்லாவைவிட்டே ஓட—ஓட விரட்டுவேன் என்று கூறியதை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இதையொட்டி 5—7—54ல் விழுப்புரம் தி மு. கழகச் சார்பில் ஓர் கண்டனக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## கீழ்புனல்வாயில் தி.மு.க.

20—6—54ல் (தஞ்சை) கீழ்புனல்வாயில் தி. மு. கழக 3-வது ஆண்டுவிழா தோழர் பி. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அலாவுதீன், கண்டியூர் பஞ்சாயத்து போர்டு மெம்பர் அப்பாசாமி, சுப்பண்ணு, சிவம், தாமரைச்செல்வன் ஆகியோர் பேசினர்; மாலை 4 மணியளவிற்கு கஞ்சி வார்க்கப்பட்டது. இதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரு. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

## தொட்டியம் தி.மு. கழகம்

21—6—54 இரவு 9 மணிக்கு பொருளாளர் கணேசன் தலைமையில் கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது ஏற்கனவே இருந்த துணைச் செயலாளருக்குப் பதிலாக தோழர் பாலகிருட்டிணன் தேர்ந்தெடுக்கப்பட்டார். மணப்பாறை குமரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இரவு 11 மணிக்கு புதிய கல்வித் திட்டம் ஒழிந்ததைக் குறித்து பலர் சொற்பொழிவாற்றினர்.

## கடையநல்லூர் (நகர கிளை) தி. மு. க.

18—6—54ல் தோழர் ஐ கந்தசாமி தலைமையில் கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, தென் காசி வட்டக் கழகத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் தோழர் ஈ வே கி. சம்பத் அவர்களின் சுற்றுப்பயணத்தின்போது ஒரு கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு ஒரு குழு நியமிக்கப்பட்டும் கழக நிதிக்காக ஒரு நாடகம் நடத்துவதெனவும், புதிய கல்வி திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சேலம் வட்ட தி. மு. க.

13—6—54 மாலை 5 மணிக்கு சேலம் வட்ட தி. மு கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் கூடி, சேலம் வட்டக் கழகச் செயலாளராக தோழர் இரா மாணிக்கம் அவர்களையும், மாவட்டப்பிரதிநிதியாக தோழர் கே. அண்ணாமலை அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது 17—6—54 காலை 10.30 மணியளவுக்கு மேற்படி கூட்டம் நடைபெற்றபோது, துணைச் செயலாளராக தோழர் என் சுந்தரம் அவர்களையும், பொருளாளராக, தோழர் டி. வி. நாதன் அவர்களையும், செயற்குழு உறுப்பினர்களாக இ ஆர் கிருஷ்ணன், வி கே. வெங்கட்டப்பன், இராமச்சந்திரன், ஆர். சோமநாதன், கே. சி. தாமோதரன், பழனிசாமி ஆகியோரையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## பாண்டமங்கலம் தி.மு.க.

20—6—54 இரவு 8½ மணிக்கு கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் வீ. வணங்காமுடி தலைமையில் நடைபெற்றபோது, விரைவில் ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டபோது, கழக ஆக்க வேலைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

## பாப்பம்பட்டி தி. மு. க.

22—6—54ல் தோழர் ஜி சுப்புசாமி தலைமையில் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது, மணப்பாறை குமாரவேல் மறைவுக்கும், கழகச் செயலாளர் ஜி. எஸ். பதியின் மகள் தனம் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

## கல்லக்குடி தி. மு. கழகம்

27—6—54 காலை 9 மணிக்கு உறுப்பினர்கள் கூட்டம் தோழர் அ தம்புசாமி தலைமையில் நடைபெற்றது. கழக முதல் ஆண்டு விழாவை ஆகஸ்டு 14-ந் தேதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## முத்துச்சாமிபுரம் தி.மு.க.

28—6—54ல், கழக உறுப்பினர் கூட்டம் தோழர் எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றபோது, பொருளாளர் பி சுப்பிரமணியம் விலகுவதை ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## அறந்தாங்கி தி. மு. க.

20—6—54-ல், நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில் வரவு - செலவு கணக்குடன் அங்கீகரிக்கப்பட்டதுடன், மாவட்டப் பிரதிநிதி தோழர் இராசகோபால் விலகிக்கொள்வதால், புதிய மாவட்டப் பிரதிநிதியாக தோழர் மு. சீனிவாசன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## புஞ்சைத்தலையூர் தி.மு.க.

### 4-வது ஆண்டு விழா

22—6—54-ல் காத்தசாமி பாளையத்தில், தோழர் கே. வி அரசன் தலைமையில் புஞ்சைத்தலையூர் தி மு. கழக 4-ம் ஆண்டு விழாவும், கல்வித் திட்ட வெற்றி விழாவும் நடைபெற்றது. தோழர்கள் எ. கே சிரப்பன், மல்லடம் பொன்னுசாமி, தி மு. அன்னல்மாறன், கோவை செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், இலங்கை வாழ் திராவிடர்களுடைய பிரச்சினையில் நல்லதொரு முடிவு காணுமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டும், நத்தக்குடி வழக்கை வாபஸ் பெறுமாறு சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொண்டும், புதிய கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சி. முட்லூர் தி.மு.கழகம்

### முதலாண்டு விழா

22—6—54 மாலை 6 மணிக்கு தோழர் தில்லை - வில்லாளன் தலைமையில் சி. முட்லூர் தி. மு. க. முதலாண்டு விழா நடைபெற்றது. தோழர் கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் ராமசாமி படையாச்சி மந்திரி பதவியில் மயங்கி, மக்களுக்குத் துரோகமிழைத்ததைக் கண்டித்தும் வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் ஓட்டளிக்கும் முறையைக் கண்டித்தும், தேர்தலில் மக்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் பேசினார். அடுத்து, தோழர் சி. பி. சிற்றரசு மக்கள் சமுதாயத்திலுள்ள கேடுகளை விளக்கியும், மூடநம்பிக்கையால் முடக்கப்பட்ட பொருளாதாரத்தை மக்களுடைய முன்னேற்றத்திற்காக செலவழிக்க இன்றைய ஆட்சியாளர் முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். தோழர்கள் அறிவழகன், சொக்கலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## புளியங்குளம் தி. மு. க.

15—6—54 இரவு 8 மணிக்கு கருங்கடல் கிராமம் புளியங்குளம் தி மு. கழக உறுப்பினர் கூட்டம் மு. ச. மணிமொழியன் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: பொ. அப்பாதுரை; துணைச் செயலாளர்: ஏ. பாலையா; பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி: என். எம். மணியன்; செயற்குழு உறுப்பினர்களாக 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பம்பாய் தி. மு. கழகம்

27—6—54 மாலை 7 மணியளவில் கழக அலுவலகத்தில் தோழர் ம. இரா. ரெத்தினசாமி தலைமையில் தி. மு. கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, கடிதப் போக்குவரத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டது

## சேலம் மாவட்ட தி. மு. கழக மாநாடுகள்

### செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்

24-6-54ல், சேலம் மாவட்ட தி மு. கழக 2-வது மாநாட்டு செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஜி. பி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது சேலம் மாவட்ட தி. மு கழக 2வது மாநாட்டின் வரவு-செலவு கணக்குள் அங்கீகரிக்கப்பட்டதுடன், மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்களுக்கு செயற் குழு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டது.

# தி. மு. கழகங்கள் துவக்கம்

★

## நெய்வேலி

8—6—54ல் கழகத் துவக்க விழா தோழர் காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். வி நடராசன் 'தொழிலாளர் கடமை' பற்றி பேசினார். தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., லேசகையில் மந்திரி எஸ். எஸ். ராமசாமி அவர்களைத் தேர்ந்தெடுத்த அந்தத் தொகுதி மக்களுக்கு துரோகம் செய்துவிட்டார் என்றும், நிலக்கரி சுரங்க நிர்வாகி கோஷ் தொழிலாளர்களிடையே சம்பள ஏற்றத்தாழ்வு செய்வதைக் கண்டித்தும் பேசினார்.

★

## முட்டாஞ்செட்டி

15—6—54ல், தோழர் கே. ராமசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கி. ராமசாமி; துணைச் செயலாளர்: கி நடராசு; பொருளாளர்: அ. சுப்பன்; மாவட்டப் பிரதிநிதி: வீ. நடராசு; செயற்குழு உறுப்பினர்கள்: பழனிமுத்து, செங்கசாமி, வரதன், சண்முகம், சங்கரன், கந்தசாமி, பெருமாள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

★

## அனுமந்தன்பட்டி

22—6—54 மாலை 8 மணிக்கு இவ்வூரில், தோழர் அ செங்கசாமி தலைமையில், தி. மு. கிளைக் கழகம் நிறுவப்பட்டது. பின்னர், செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: அ அரங்கசாமி; துணைச் செயலாளர், எஸ். பெரியகாமகம்; பொருளாளர்: ஆ. மு. செல்வர்; மாவட்டப் பிரதிநிதி: ரா. சு. பாண்டியன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 7 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மாரப்பாளையம்

20—6—54 இரவு 8 மணிக்கு மாரபாளையத்தில், தோழர் எம். பழனிச்சாமி தலைமையில், தி. மு. கழகம் அமைக்கப்பட்டு செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: எம். காளியப்பன்; துணைச் செயலாளர்: எம். பொன்னம்பலம்; பொருளாளர்: வ. ராமசாமி; செயற்குழு உறுப்பினர்கள், எம். பழனிச்சாமி, ரா. பழனிச்சாமி, சே. மலையாளம், கி. சின்னுசாமி, மு சின்னுசாமி, வே. பெருமாள், கிருட்டினன், வை. ராமசாமி, மா. குமரன், க. கந்தசாமி. கூட்ட ஆரம்பத்தில் தரு எம். கே கரிகாலன் கழக கொள்கைகள் குறித்தும், அமைப்பு விதிகள் குறித்தும் விளக்கினார். மணப்பாறை குமாரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்ற காமராசரைப் பாராட்டியும் தீர்மானிக்கப்பட்டன.

★

## சுந்தரபாண்டியம்

21—6—54ல், திருவள்ளுவர் நூல் நிலையத்தில், தி மு. கழக அமைப்புக்குழு கூட்டம் தோழர் ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் க சு. கணபதி செயலாளராகவும், அ. மு. கைலாசம் துணைச் செயலாளராகவும், க. இளஞ்சேரன் பொருளாளராகவும், எஸ். ஏ. வீ. சாமி விளம்பர உறுப்பினராகவும், எம். மாசாமி, மாவட்டப் பிரதிநிதியாகவும், புரட்சிதாசன், க. குருசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஆரம்பப் பள்ளிகளுக்கு சர்க்கார் மானியம்

### சென்னை நகரசபைக்கு ரூ. 45 ஆயிரம் கிடைக்கும்

சென்னை, ஜூன் 30—

சென்னை அரசாங்கம் 1921-ஏப்ரலுக்குப் பிறகு தோன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்கெல்லாம், பள்ளி நிர்வாகத்திற்காக 1954-55-ம் ஆண்டிற்கு மானியம் தர வேண்டுமென்ற கல்வித் துறை அதிகாரியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மானியம் தர சம்மதித்துள்ளது.

இதன்படி 1954-55ல் சென்னை நகரசபைக்கு மாத்திரம் கைத்தொழிற் பயிற்சிக்காகவென்று தரப்படும் ரூ. 1730 உட்பட ரு 42,933 கிடைக்கும் எனத் தெரிகிறது.

---

மேற்கு ஐப்பானில் நடந்த இரண்டு நாட்களாக பலத்த புயல் அடித்ததின் காரணமாக 17 பேர் கொல்லப்பட்டனர்: 60,000 வீடுகள் நாசமடைந்தன.

## திலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகம்

திலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகச் சார்பில், 27-6-54 இரவு 8 மணிக்கு தோழர் இ காத்தான் தலைமையில் அத்தக்குடி தோழர் ஜி அப்பாசாமி பல விதமான வேடிக்கைகள் செய்து அவை யெல்லாம், 'மந்திரமல்ல, தந்திரம்' என்பதை நிரூபித்து விளக்கம் கூறினார். தோழர் அ. பாஸ்கரன் தி. மு. கழக வளர்ச்சி பற்றிப் பேசினார்.

## கடலூர் ஓ. டி. 2-வது வட்ட கிளை தி. மு. க.

27—6—54ல் அண்ணா அன்பு நிலையத்தில் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, மணப்பாறை குமாரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

## ஜில்லா போர்டு தேர்தல்

### தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் பகிஷ்காரம்

27—6—54ல், தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளன காரியக் கமிட்டிக் கூட்டம் தென்னாற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பத்தில் தோழர் ஏ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது, ஜில்லா போர்டு தேர்தலில் சென்னை மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை விகிதாசாரப்படி ஸ்தானங்கள் ஒதுக்காமல் ஆதிகுடி மக்களுக்கு ஆட்சியாளர் அநியாயம் செய்திருப்பதைக் கண்டிப்பதுடன், இக்காரணத்தினால் வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தலில் கலந்து கொள்வதில்லையென்றும் முடிவு செய்யப்பட்டதுடன் குடியாத்தம் உபதேர்தலில் போட்டியிடுவதில்லை யென்றும், சென்னை மாநில அரசினர் 'வெல்பேர்' கமிட்டி மாவட்ட 'வெல்பேர்' கமிட்டி நியமனங்களில் நம்பிக்கையில்லை யென்றும், ஆட்சியாளர் அலுவலகங்களிலும், ஏனைய ஸ்தாபனங்களிலும் தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை விகிதாசாரப்படி உத்தியோகங்களும் நியமனங்களும் அளிக்காமல் பாரபட்சமாக நடந்து கொள்ளும் முறையைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அழிவுச் சாதனம் ஆக்க வேலைக்கு!

சர்வ நாசத்தை உண்டாக்கும் அணுசக்தியை மக்களுக்கு நன்மையை உண்டாக்கும் திட்டங்களுக்காக பயன்படுத்துவதில் ரஷ்யா முனைந்துவிட்டது. அணுசக்தியைக் கொண்டே மின்சாரம் உற்பத்தியை ஆரம்பித்துவிட்டது. அந்த மின்சாரம் விவசாயப் பண்ணைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் விநியோகிக்கப்படும்.

